முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 23/2021

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவராமலிங்கம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : நடராஜன் | கிராமம் | : வேலம்பாளையம் |
| வயது | : 51 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 24-01-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் 10ம் வகுப்பு படித்திருக்கிறேன். தாவாச் சொத்துக்கள் ஆதியில் 23.05.1941ல் வேலப்ப கவுண்டரும், முருகப்ப கவுண்டரும் வாங்கிய சொத்துக்களின் ஒரு பகுதி என்றால் சரிதான். 20.10.1962ம் தேதி முருகப்ப கவுண்டர்,சுப்பண கவுண்டர், பழனிச்சாமி, பெரிச்சி கவுண்டர் ஆகியோர் இதர சொத்துக்களையும் சேர்த்து ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினைப்படி முருகப்ப கவுண்டருக்கு 15, வேலம்பாளையம் கிராமத்தில் க.ச.எண்.580/1ல் 90 செண்ட்டும் 581/2ல் 3.32 ஏக்கர் சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேலும் கனியாம்பூண்டி கிராமத்தில் 1.96 ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) கடந்த 19.09.1996ம் தேதியில் முருகப்ப கவுண்டர் என் பெயரில் ஒரு உயில் ஆவணம் எழுதிவைத்திருக்கிறார். அந்த உயில் ஆவணத்தை முருகப்ப கவுண்டர் கடந்த 28.04.2000ம் தேதியில் ரத்து செய்து விட்டார் என்றால் சிவராமகிருஷ்ணன் என்ற பெயரில் உயில் ஆவணம் ரத்து

செய்யப்பட்டுவிட்டது. கடந்த 23.05.2000 ம் தேதியில் க.ச.எண்.581/2 ல் 1 ஏக்கர் பூமியை முருகப்ப கவுண்டர் ஈஸ்வரமூர்த்தி பெயரில் கிரயம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் ஆவணங்கள் அவ்வாறு தான் இருக்கிறது. முருகப்ப கவுண்டர் அ.வ.எண்.3/2001 வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு முருகப்ப கவுண்டர் நடத்தாமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஈஸ்வரமூர்த்தி பேசி முடித்துக் கொள்ளலாம் என்று சொன்னதால் முருகப்ப கவுண்டர் வழக்கை விட்டுவிட்டார்.

3) ஈஸ்வரமூர்த்தி சொன்னதற்கு எழுத்துப்பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். கடந்த 23.05.2005 ம் தேதி க.ச.எண்.581/2 ல் மீதமுள்ள 2.32 ஏக்கரில் 96 செண்ட் நிலத்தை என் தகப்பனார் நடராஜன் ஒரு நாகராஜனுக்கு கிரயம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். கிரய பத்திரத்தில் நான் 1 வது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். கிரய பத்திரத்தில் ஈஸ்வரமூர்த்திக்கு விற்பனை செய்த 1 ஏக்கர் நீங்கலாக உள்ள 2.32 ஏக்கரில் 96 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

4) கடந்த 19.09.1996 ம் தேதியிட்ட உயில் ஆவணத்தை விளம்புகை செய்ய நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். முருகப்ப கவுண்டர் தாக்கல் செய்த அ.வ.எண் 3/2001 ஐ மீண்டும் நடத்த நானோ, என் தகப்பனாரோ நடவடிக்கை எதுவும் எடுத்தோமா என்றால் இல்லை. கடந்த 2001 ம் வருடமே வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும். என் தாத்தாவே ஈஸ்வரமூர்த்திக்கு சொத்தை விற்று விட்டதால், 19.09.1996 ம் தேதியிட்ட உயில் ஆவணம் செல்லாததாகி விட்டது என்றால் சரியல்ல.

5) ஈஸ்வரமூர்த்தி தான் கிரயம் பெற்ற சொத்தில் 40 செண்ட் நிலத்தை கடந்த 20.02.2015ம் தேதியன்று தன் மனைவிக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருக்கிறார் என்றால் சரிதான். கடந்த 20.02.2015ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம், 23.05.2000ம் தேதியிட்ட கிரய பத்திரம் மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகளின் பெயரிலான கடந்த 22.07.2015ம் தேதியிட்ட கிரய ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எனக்கு கடந்த 2015ம் வருடமே தெரியும்.

6) மேற்சொன்ன விவரங்கள் எனக்கு கடந்த 2015ம் வருடம் தெரிந்தும், நான் கடந்த 2021ம் வருடம் தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆவணங்களை நகல் எடுத்து பார்த்த பின்பு தான் தெரிந்தது. கடந்த 2015 முதல் 2021 வரை ஈஸ்வரமூர்த்தி பேச்சு வார்த்தை நடத்தி வந்தார். 1 ஏக்கர் சொத்துக்கு ஈஸ்வரமூர்த்தி பெயரில் பட்டா ஏற்பட்டு பின்னிட்டு அவரது மனைவி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்பு 3 முதல் 5 பிரதிவாதிகள் கிரயம் பெற்று, அவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 1 ஏக்கர் சொத்து பாத்தியப்பட்டுள்ளதால், அதை பொறுத்து நான் எத்தகைய பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. 1 ஏக்கர் சொத்து முழுவதும் 3 முதல் 5 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படுகிறது என்றாலும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.24 17:52:21 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.